[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இடுக்கி நீர் மின் விசை கேரளாவிலே இருப்பது. கேரளாவினுடைய தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு, அதற்குப் பிறகு மீதி இருந்தால்தான், மற்ற மாநிலங்களுக்குப் பூர்த்திசெய்ய முடியும். கேரளா மாநிலத்தி னருடன் இனிமேல்தான் அதைப்பற்றிப் பேச வேண்டும். பேசுகின்றபோது தெரிவிப்பார்கள். அதுபற்றி இன்னும் தெரிய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Festival of "Valvil Ori".

* 2 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have any proposal to continue the celebration of the festival of "Valvil Ori" in the Kollimalai, Salem district ; and

(*b*) if so, when the festival will be celebrated ?

''வல்வில் ஓரி'' விழா

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு செய்தி-இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையில் ''வல்வில் ஓரி'' விழா கொண்டாடப்பட்டு வந்ததைத் தொடர்ந்து நடத்து வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில் எப்போது கொண்டாடப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) & (இ) மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 3–8–78–ல் விழா கொண்டாடப்பட்டது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது? அந்த விழா வேறு இடத்தில் நடத்தக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் துறை யிலே இந்த விழா கொண்டாடியிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து கொண்டாடுகின்ற முடிவை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்ற விழா மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பில் நடந்தது. அவர் களுடைய ஏற்பாடுகளோடு அறநிலையத் துறையினரும் சேர்ந்து இருந்து, சுற்றுலாத் துறை உதவியோடு நடத்தப்பட்டிருக்கிறது.

1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கான விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களை சேகரித்துத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்ரமணியம்: கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரிக்கு விழா நடத்துவது சிறப்பான முறையில் இருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும். சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் சேர்ந்து விழா நடத்தப்படுகிறது. இந்த விழாவில் சர்வ கட்சியினரும் கலந்து கொள்ளும் முறையிலே இந்த விழாவைத் தொடர்ந்து அரசு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசினர் நடத்தும் விழாக்களுக்குச் சர்வ கட்சியினரையும் அழைத்துத்தான் விழாக்கள் நடத்தப்படுகின்றன. அந்த மாதிரி விழாக்களை நடத்துவதற்கு காரணமான பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்ற துறையினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறார்கள். அந்த விழாக்களில் சர்வ கட்சியினரும் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 3–8–78 அன்று நடைபெற்ற விழா மிகவும் சிறப்பாக இருந்தது. மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் அளவிலே இருந்தது. ஏராளமான மக்கள் கலந்து கொண்டார்கள். அதில் நானும் கலந்து கொண்டேன். ஆனால், அங்கே போக்குவரத்து வசதி, சாலை வசதிகள் எல்லாம் சிறப்பாக இல்லாமல் இருக்கிறது. அது மிகவும் கடினமாக இருக்கிறது. சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அதை விரைவாகச் செய்வார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த மலைப் பாதைகள் குறுகிய வளைவுகளைக் கொண்ட பாதைகளாக இருக்கின்றன. நீண்ட பேருந்துகள் போக முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மலை மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் செலவு செய்யும் அடிப்படையிலே, அதற்கான அமைப்பு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். சேலம் மாவட்டத்தில் மிகப் புகழ் வாய்ந்த மலை வாசஸ்தலமாக மாற்றுவதற்கான கருத்து இருப்பதால், எதிர் காலத்தில் எந்த அளவுக்குத் தேவைகளை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: வல்வில் ஓரி கடையேழு வள்ளல்களில் ஒருவர். இந்த விழா அவருடைய நினைவாக நடைபெற்று வருகிறது. இந்த நேரத்திலே, துறையிலே வல்லுநர்கள் ஏழைகளுக்கு உதவிகள் வழங்குகின்ற முறையையும் இந்த விழாவோடு இணைத்து அவர்களுடைய சிறந்த பண்புகளை வலியுறுத்துமளவுக்குச் செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: வருகின்ற ஆண்டுகளிலே இந்த விழா நடத்தப்படுகின்றபோது, மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: வல்வில் ஓரிக்கு விழா எடுப்பது போல, மற்ற எஞ்சிய வள்ளல்களுக்கும் விழா எடுக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தமிழகத்திலே வள்ளல்கள் பலர் இருந்தார்கள். வரலாற்றில் எத்தனையோ வள்ளல்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. அதற்கான இலக்கியச் சான்றுகள் இருந்தால், அதற்கு ஏற்றாற்போல் விழாக்கள் நடத்துவது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழா கொண்டாடப்பட்டது என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், சுற்றுலாத் துறையினரும் பொறுப்பு ஏற்று நடத்தியிருக்கிறார்கள். அந்த விழாவிற்கு ஆளும் கட்சியினரை, எதிர்க் கட்சியினரை முறையாக அழைக்க அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எந்த விழா நடைபெற்றாலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசினுடைய முடிவு. இந்த விழாவைப் பொறுத்து, சூறிப்பிடப்பட்ட தவறு நடந்ததாக அரசுக்குத் தகவல் இல்லை. முதன்முறையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருந்தால், அதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து இனிமேல் அப்படித் தவறு நடக்காமலிருக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்த விழா எப்படி கொண்டாடப்படுகின்றது? இது கொண்டாடப்படுவதற்கான முறைகள் யாவை?

1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த விழா வல்வில் ஓரி நினைவாக நடத்தப்படுகிறது. சிறப்புரை ஆற்றுதல், பட்டி மன்றம் நடத்துதல், கவி அரங்கம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற மக்களால் பாராட்டப் படுகின்ற அளவுக்குத் தான் விழா நடைபெற்று வருகிறது.

திரு. க. அறிவழகன்: வல்வில் ஓரியை வில்வித்தையில் மிக முக்கியமானவராகக் கருதுகிறுர்கள், ஆகவே வில்வித்தையிலே சிறந்தவர்களாக இருப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பதாக இருந்தால் அந்த மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை அரசு செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாம் வில்வித்தைக்குப் போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறுர்களா என்று தெரிந்து கொண்டால், அதற்குப் பிறகு அரசு அதைப்பற்றி முடிவு எடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

Physical Education Teachers.

* 3 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the proposal to sanction incentive increments to Higher Physical Education Teachers possessing B.P.Ed., has been pending consideration by the Government ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சிக் கல்வியில் பட்டம் பெற்ற உயர்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் செயற் குறிப்பு முடிவாகாமல் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இச்செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இது பற்றிய பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை 42, தேதி 10-1-69 லேயே வழங்கப்பட்டு விட்டது. அதில் இருந்த தகுதி எப்படி இருந்தது?